

விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பக்கிங்ஹாம் கால்வாயில் 3 இளைஞர்கள் தவறி விழுந்து உயிரிழந்தனர். இதனை அறிந்த வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேரில் சென்று அஞ்சலி செலுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அரசு நிவாரணத் தொகையை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர், சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மஸ்தான், மாவட்டப் ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா உள்ளிட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லை மாவட்டம் இராதாபுரம் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.நிகழ்வில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஜோசப்பெல்சி, நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு,ராமையா, கோவிந்தராஜ்,சமூகை முரளி, ரமேஷ்துரை,நடராஜன்,இசக்கி பாபு,படையப்பா முருகன்,பொன் மீனாட்சி அரவிந்தன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் அறிக்கை! முதல் பக்கத் தொடர்ச்சி

கணக்கெடுப்பாக நீதிமன்றங்களோ இன்னபிற ஒன்றிய அரசு அமைப்புகளோ அங்கீகரிக்கும், மாறாக மாநில அரசு மக்கள் தொகை கணக்கெடுப்பை மேற்கொள்ளும் போது அது வெறுமனே கணக்கெடுப்பாக இருக்குமே தவிர அதனால் யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை என்பதற்கு பல உதாரணங்கள் உள்ளன. சமீபத்தில் பீகாரில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்பு அடிப்படையில் கொடுக்கபட்ட இட ஒதுக்கீட்டினை, நீதிமன்றம் நிராகரித்துவிட்டதை எல்லாம் வசதியாக மறந்துவிட்டு அன்புமணி ராமதாஸ் அவர்கள் பேசி வருகிறார்.

1989 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சராக இருந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற பிரிவினை ஏற்படுத்தி, 115 மிகவும் பின்தங்கிய சமூக மக்கள் கல்வி வேலைவாய்ப்பில் முன்னேறி வாழ்வில் ஏற்றம் பெற காரணமாக இருந்தார். கலைஞர் அவர்கள் அவசரகதியில் அரசியலுக்காக எதுவும் செய்யாமல் ஆழ்ந்து ஆலோசித்து உண்மையிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்ட மீது அக்கறை கொண்டு எந்த நீதிமன்றமும் நிராகரித்துவிடாதபடி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டினை செயல்படுத்திக் காட்டினார்.

**மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக திட்டங்களை முன்னெடுக்கும் முதல்வர்!**

தலைவர் கலைஞர் வழியில் பயணிக்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற உடனே கடந்த 1987 அதிமுக ஆட்சியில் இட ஒதுக்கீடு கேட்டு போராடியதற்காக சுட்டுக்கொல்லப்பட்ட இட ஒதுக்கீடு போராளிகள் 21 பேருக்கு விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார். அதன்படியே மணிமண்டபம் அமைக்கபட்டு விரைவில் திறக்கப்பட உள்ளது. அதேபோல மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் பயன்பெறும் பல்வேறு நலத்திட்டங்களை முன்னெடுத்து செயல்படுத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள்.

அன்புமணிக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன் ஏற்கனவே உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு மூலம் கடந்த பத்து ஆண்டுகளாக மருத்துவம் உள்ளிட்ட மேற்படிப்பிற்கு செல்லும் வன்னிய சமூக மாணவர்களின் எண்ணிக்கை 10.5% விட அதிகம். தற்போது 10.5% யை அமல்படுத்துவதன் மூலம் மேற்படிப்பில் சேரும் வன்னியர் சமூக மாணவர்கள் எண்ணிக்கையில் பின்னடைவை சந்திக்கவே வாய்ப்புகள் அதிகம். ஆனால், அதைப்பற்றி எல்லாம் அவர்களுக்கு கவலை இல்லை. அரசியல் செய்ய வேண்டும் என்பதற்காகவே செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே எதையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என முடிவுசெய்யும் அரசல்ல இந்த திராவிட மாடல் அரசு. எதைச் செய்தாலும் அதில் யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வண்ணமும், அது யாராலும் நிராகரிக்க முடியாதவண்ணமும் அமைய வேண்டும் என்ற வகையில் கலைஞர் காட்டிய வழியில் சரியான முடிவுகளை எடுத்து செயல்படுத்தி வரும் அரசாகவே இருக்கிறது.

**இளைஞர்களுக்கு சாதிவெறியை பாய்ச்சி வரும் டாக்டர் ராமதாஸ்!**

ஆனால் தற்போது பா.ம.க.வோ தங்கள் அரசியல் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு மிகவும் பிற்படுத்தபட்ட மக்களுக்கு துரோகத்தை மட்டுமே செய்து வருகிறது. நன்றாய் படித்து வேலைக்கு சென்று வாழ்வில் சிறந்த நிலையை அடையக்கூடிய வாய்ப்புள்ள இளைஞர்களை எல்லாம், பிஞ்சிலேயே சாதி வெறி பாய்ச்சி நன்றாய் செழித்து வளர வேண்டிய அந்த இளைஞர்களை வெறும் களைகளாய் மாற்றிக் கொண்டிருப்பதுதான் பா.ம.க.வின் சாதனை. மருத்துவராகவும், பொறியாளராகவும், மாவட்ட ஆட்சியராகவும் இன்னபிற அரசின் உயர் பதவிகளில் இடம்பெற வேண்டிய இளைஞர்களை உங்கள் அரசியல் நலனுக்காக தவறான வழியிலே வழிநடத்தி வரும் தங்களை இனியும் இச்சமூகத்து இளைஞர்கள் நம்பப்போவதில்லை.

அன்புமணி ராமதாசுக்கு உண்மையிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மீது அக்கறை இருக்குமானால் அவர் கை குலுக்கி உறவாடி கூட்டணியில் இருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசை பணியவைத்து, சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த சொல்லுங்கள். ஆனால், அதற்கு தைரியம் வேண்டும். தைலாபுரம் பயிலரங்கத்தில் சொல்லி தர மாட்டார்களா? மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக நடத்த வேண்டும் என மோடி அரசை கேட்பீர்களா? அதை எல்லாம் நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்!

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

**தகுதித் தேர்வு நடத்துவதற்கு போதுமான வசதிகளை ஆசிரியர் தேர்வு வாரியம் கொண்டுள்ளது!**

# பல்கலைக் கழக பேராசிரியர்கள் பங்களிப்புடன் SET தேர்வு நடத்தப்படும்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அறிவிப்பு

*சென்னை, டிச. 26-*

“மாநில தகுதித் தேர்வு (SET) நடத்துவதற்கான போதுமான நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) கொண்டுள்ளது. பல்கலைக்கழக பேராசிரியர்களின் பங்களிப்புடன் SET தேர்வு நடத்தப் படும்” என அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் 1987ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு நாளதுவரை செயல்பட்டு வருகிறது. இவ்வாரியம் அரசுப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களை தேர்வு செய்வது மற்றும் கல்லூரிக் கல்வி இயக்ககம், தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சட்டக் கல்வி இயக்ககம் ஆகியவற்றின் கீழ் உள்ள கல்லூரிகளில் உள்ள உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு தகுதியுள்ள உதவிப் பேராசிரியர்களை தெரிவு செய்யும் அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

மேலும், 2011 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்திடும் முகவாண்மை நிறுவனமாக (Nodal Agency) அரசால் நியமிக்கப்பட்டு தேர்வுகள் நடத்தப் பட்டு வருகிறது. அத்தோடு 2023இல் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மறுசீரமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசின் பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழக ஆசிரியர் பணியாளர்களை ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தெரிவு செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

1988 முதல் தற்போது வரை பல்வேறு நிலைகளில் பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்வித் துறைகளுக்கு 1,68,657 ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்கள் இந்த தேர்வு வாரியத்தால் முறையாக தேர்வு செய்து அனுப்பப்பட்டுள்ளனர். இது தவிர கடந்த ஆண்டு முதலமைச்சரின் அறிவிப்புக்கு இணங்க முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகை வழங்க தகுதிபெற்ற மாணவர்களை தேர்வு செய்ய ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு நடத்தப்பட்டு 120 மாணவர்கள் முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத் தொகை பெற ஏதுவாக கல்லூரி கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டது.

தற்போது தமிழ்நாடு அரசால் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் மாநில தகுதித் தேர்வினை (SET) நடத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாணைக்குட்பட்டு உயர்கல்வித்துறை மற்றும் பல்கலைக்கழக பாட வல்லுநர்கள் மற்றும் பேராசிரியர்களை ஈடுபடுத்திக் கொண்டு மேற்கண்ட தேர்வினை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் வெளிப்படைத் தன்மையுடன் பல்கலைக் கழக நிதிநல்கைக் குழுவின் நெறிமுறைகளைப் பின்பற்றி



நடத்த திட்டமிட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் மூலம் நடத்த வேண்டிய தேசியத் தகுதித் தேர்வு (NET) வெளி முகமையான தேசியத் தேர்வு முகமை (NTA) மூலமே நடத்தப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மாநில தகுதித் தேர்வு (SET) நடத்துவதற்கான போதுமான நிர்வாக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை ஆசிரியர் தேர்வு வாரியம் கொண்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மின் ஆளுமை நிறுவனத்துடன் இணைத்து இணையவழி தேர்வு நடத்துவதற்கும், நேரடித் தேர்வு நடத்துவதற்கும் போதுமான வசதிகளும் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் உள்ளது.

எனவே, மாநிலத் தகுதித் தேர்வினை (SET) தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமே சிறப்பாகவும் முறையாகவும் நடத்தப்படும்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்தார்.

**கழக முன்னாள் மாநில தொண்டரணி செயலாளர்**

# சிந்தை மு.ராஜேந்திரன் மறைவு!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, டிச. 26-

கழக முன்னாள் மாநில தொண்டரணிச் செயலாளரும் கழக முன்னோடியுமான சிந்தை மு.ராஜேந்திரன் அவர்களின் மறைவிற்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.



கழக முன்னாள் மாநில தொண்டர் அணி – செயலாளர் – மத்தூர் கலைமகள் கல்வி நிலைய தாளாளர் – முன்னாள் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் – கழக மூத்த முன்னோடி முனைவர். சிந்தை. மு.ராஜேந்திரன் அவர்கள் நேற்று (25.12.2024) மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

சிந்தை மு.ராஜேந்திரன் மறைவுக்கு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**கழக மாநில தொண்டர் அணி முன்னாள் செயலாளர் முனைவர் சிந்தை மு.ராஜேந்திரன் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தில் தி.மு.கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடிகளில் ஒருவர். தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறை முன்னாள் இயக்குநராகப் பணியாற்றியவர். தருமபுரி மாவட்டம், மத்தூரில் கலைமகள் கல்வி நிலையத்தைத் துவக்கி, அப்பகுதி மக்கள் கல்வியில் மேம்பட பாடுபட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முழுக்கச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட நாட்களில் தொண்டரணிச் சீருடையில் உடன் வந்தவர்.**

**அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தார்க்கும், தருமபுரி மாவட்டக் கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கே.வி.குப்பம் துருவம் பகுதியில் பி.எஸ்.என்.எல்.செல்போன் டவர் வேண்டும் !

## ஒன்றிய அமைச்சருக்கு கதிர்ஆனந்த் எம்.பி. கடிதம்

*வேலூர், டிச.26-*

கே.வி.குப்பம் அடுத்ததுருவம் பகுதியில் அவசர தொடர்புக்கு உதவும் வகையில் பி.எஸ்.என்.எல் செல்போன் டவர் அமைக்க வேண்டும் என்று கேட்டு ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவுக்கு வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் கடிதம் எழுதியுள்ளார்.

ஒன்றிய தகவல் தொடர்புத்துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியாவுக்கு வேலூர் எம்.பி. கதிர் ஆனந்த் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

வேலூர் நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியம் மேல்காங்குப்பம் ஊராட்சிக்கு உட்பட்ட துருவம் மற்றும் சுற்று வட்டார மக்களுக்கு பிஎஸ்என்எல்

செல்போன் சிக்னல் கிடைப்பதில் தொடர்ந்து இடர்பாடு நிலவுகிறது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு துருவம் பகுதியில் சிறுத்தை தாக்கி 22 வயது இளம்பெண் உயிரிழந்த சம்பவம் நடந்தது.

சிறுத்தை உட்பட வன விலங்குகளிடம் இருந்து மக்களை காக்கும் நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகமும், வனத்துறையும், காவல்துறையும் இணைந்து பல்வேறு



நடவடிக்கைகளை எடுத்து எடுத்து வருகின்றனர். மாவட்ட நிர்வாகம் அப்பகுதி மக்களை அவசர காலங்களில் தொடர்பு கொள்ள பிரத்யேக மொபைல்எண்ணை பயன்படுத்தும்படி அறி வுறுத்தியுள்ளது. பிஎஸ்என்எல் சிக்னல் கிடைக்காததே இதற்கு காரணம். சிக்னல் கிடைக்காத தால் வேறுபல பிரச்னைகளை யும் அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, பிஎஸ்என்எல் உயர் அதிகாரிகளை அமைச்சர் தொடர்பு கொண்டு அங்கு பிஎஸ்எ ன்எல் செல்போன் டவரை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



ஈரோட்டு சிங்கம், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 51 வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைக்கு மாநகர கழக செயலாளர் மு.சுப்பிரமணியம் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சருமான சு.முத்துசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், வி.சி.சந்திரகுமார், குறிஞ்சி என்.சிவக்குமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், வீரமணி , ஆ.செந்தில்குமார், செல்ல பொன்னி, க.சின்னையன், ப.க.பழனிசாமி, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் தந்தை பெரியாரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.



மதுரை வடக்கு மாவட்டம் கிழக்கு தொகுதி மேற்கு ஒன்றியம் வீரபாண்டி ஊராட்சியில் கலைஞர் நூற்றாண்டு சமுதாய அரங்கத்தை ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் திறந்து வைத்து கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு பயனாளிகளுக்கு வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி மூர்த்தி நலத்திட்டங்கள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் சிறைச்செல்வன், நேரு பாண்டியன், ஆசைக்கண்ணன், வீரராகவன், சசிகுமார், சுகப்பிரியா விஜயகுமார் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், பொதுமக்கள், அதிகாரிகள் கலந்து கொண்டனர்.